[1972 சனவரி 29

(இ) தணிக்கை ஆண்டுதோறும் நடைபெற்றது. 1966-ஆம் ஆண்டு கணக்குபற்றிய சோதனையும் நடைபெற்றது.

(உ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: இந்தத் தணிக்கையின் மூலம் அந்த நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறதா? நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதை வசூலிக்க சம்பந்தப்பட்ட தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அது 1970-ம் ஆண்டு வரை இயக்குநர்களால் நடத்தப்பட்டு வந்தது. அதுவரை நஷ்டம் ரூ. 3,06,000. அதற்குப் பிறகு அரசாங்கம் தனி அதிகாரி போட்டு நடத்துகிறது. அதற்குப் பிறகு லாபம் ரூ. 9,000. முன்னால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய நடவடிக்கைகள் அரசின் ஆய்வில் இருக்கிறது.

Supermarkets

* 149 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Thanjavur Co-operative Wholesale Stores is operating a Supermarket in Thanjavur; and

(*b*) if so, details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) தஞ்சை சிறப்பங்காடிக்கு அரசு நிதி உதவி ரூ. 2,10,000 வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறப்பங்காடி ரூ. 50,000 லாபத்தில் சிறப்பாகவே நடைபெறுகிறது.

(Thiru K. M. Subramaniam rose.)

MR. DEPUTY SPEAKER: The main question relates to Thanjavur and the hon. Member should put a supplementary question relating to Thanjavur only.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that these costly supermarkets and departmental stores are the luxuries of advanced countries and are mostly used by the upper middle classes. So, for the lower middle classes, will the Government think of opening cheaper sales shops?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, for the sake of middle classes, mini-supermarkets are being run. Already there are 29 such mini-supermarkets. We have now got sanction of the Central Government for another 100 such mini-supermarkets. These mini-supermarkets can cater to the needs of other middle class families.

1972 சனவரி 29]

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Co-operation whether there is any proposal of Government to open supermarkets in all taluk headquarters?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The proposal is to open mini-supermarkets and not supermarkets in taluk headquarters.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட், சிறப்பு அங்காடியில் சில குறிப்பிட்ட பொருள்கள் அதாவது அமுல், அமுல் ஸ்ப்ரே, சைகிள் டயர் போன்ற பொருள்களைக் கேட்டால் அங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மெம்பர்களுக்குத்தான் கொடுப்போம். மற்றவர்களுக்கு கிடையாது என்று சொல்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகுகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தஞ்சை சூப்பர் மாக்கெட் நடத்துகிறவர்கள் இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பால் தகுந்த அளவில் கிடைக்கவில்லை என்றால், அவர்களிடத்தில் நேரில் சொல்லலாம்.

***150 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலுள்ள சூப்பர் மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, மதுரையில் உள்ள சூப்பர் மார்க்கெட் இப்போது ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. அந்த மார்க்கெட் மதுரை மாவட்ட கூட்டுறவு வணிக விற்பனைச் சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகிறது. அந்தச் சங்கத்தின் அலுவலகம் கடைவீதிப்பகுதியில் இருக்கிறது. அங்கே நிறைய இடம் இருக்கிறது. அந்த இடத்தில் இந்த சூப்பர் மார்க்கெட்டை மாற்றுவது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட் விவகாரம் புரையோடிப்போய்விட்டது. இதை மாற்றினால் மட்டும் போதாது. மொத்தம் ரூ. 4 இலட்சம் நஷ்டம் ஆகியிருக்கிறது. இதைச் சிரமைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறினார்கள். அந்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்காக தனியான உத்தரவுகள் என்னென்ன பிறப்பிக்கவேண்டுமோ அவை இப்போது ஆய்வில் இருக்கிறது.